**ஏப்ரல் – 28**

# TNPSC துளிகள்

- சித்திரவதைக்கு ஆளாக்கப் பட்டோருக்கான சர்வதேச ஆதரவு நாள் ஆனது ஒவ்வோர் ஆண்டும் ஜுன் 26 ஆம் நாளன்று ஐக்கிய நாடுகள் அமைப்பினால் கொண்டாடப் படுகிறது.
  - மனித சித்திரவதை என்பது ஏற்றுக் கொள்ளத் தக்கது அல்ல என்பதோடு மட்டுமல்லாமல் அது ஒரு குற்றம் என்பது பற்றியும் மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக இத்தினமானது கடைபிடிக்கப்படுகிறது.
- டென்னிஸ் போட்டியின் தற்கால சகாப்தத்தில் விம்பிள்டன் மெயின் டிரா (main draw) என்ற சுற்றில் பங்கேற்க உள்ள முதல் சீன விளையாட்டு வீரர் சாங்க் சிசேன் (Zhang Zhizhen) என்பவராவார்.
  - 24 வயதான சாங்க் உலகத் தரவரிசையில் 178வது இடத்தில் உள்ளார்.
- டிரைடன் மின்சார வாகன உற்பத்தி நிறுவனமானது தெலுங்கானாவின் சாஹீராபாத்திலுள்ள தேசிய முதலீட்டு மற்றும் உற்பத்தி மண்டலத்தில் மின்சார வாகன உற்பத்தி அலகு (மையம்) ஒன்றினை நிறுவ உள்ளதாக அறிவித்துள்ளது.
  - டிரைடன் மின்சார வாகன உற்பத்தி நிறுவனமானது அமெரிக்காவைச் சேர்ந்த ஒரு மின்சார வாகன நிறுவனமாகும்.

# தமிழ்நாடு செய்திகள்

## சிஇஓ உலகப் பத்திரிகை


- 2021ஆம் ஆண்டில் உலகின் தலைசிறந்த 100 மருத்துவக் கல்லூரிகளின் பட்டியலில் தமிழகத்தின் 2 கல்லூரிகள் இடம் பிடித்துள்ளன.
- சிஇஓ உலகப் பத்திரிகை சார்பில் ஆண்டுதோறும் உலகின் தலைசிறந்த மருத்துவக் கல்லூரிகள், ஃபேஷன், மேலாண்மை உள்ளிட்ட பல்வேறு துறைக் கல்லூரிகள் எனப் பலவற்றின் பட்டியல் வெளியிடப்படும்.
- இவ்வாண்டு இதில் வேலூர் கிறித்தவ மருத்துவக் கல்லூரி 49வது இடத்தையும், சென்னை மருத்துவக் கல்லூரி 64வது இடத்தையும் பிடித்துள்ளன.
- அதே போல புதுச்சேரி ஜிப்மர் மருத்துவக் கல்லூரி இதில் 59வது இடத்தைப் பிடித்து உள்ளது.
- வாரணாசி மருத்துவக் கல்லூரி இதில் 72வது இடத்தில் உள்ளது.

# தேசியச் செய்திகள்

## பொலிவுறு நகர விருதுகள் 2020

- பொலிவுறு நகரங்கள் திட்டத்தின் கீழ் 2020 ஆம் ஆண்டிற்கான பொலிவுறு நகர விருதுகள் அறிவிக்கப் பட்டுள்ளன.
- 2020 ஆம் ஆண்டிற்கான இந்தியப் பொலிவுறு நகர விருதிற்கான பட்டியலில் உத்தரப் பிரதேச மாநிலமானது முன்னணியில் உள்ளது.
- மத்தியப் பிரதேசம் இரண்டாமிடத்திலும் தமிழ்நாடு மூன்றாம் இடத்திலும் உள்ளன.

- 2020 ஆம் ஆண்டில் ஆற்றிய சிறப்பான செயல்திறனுக்காக சூரத் மற்றும் இந்தோர் ஆகியவை சிறந்த பொலிவுறு நகரங்களுக்கான விருதினைப் பெற்றுள்ளன.
- சண்டிகருக்கு சிறந்த ஒன்றியப் பிரதேச விருதானது வழங்கப் பட்டுள்ளது.
- இந்த விருதுகளானது மூன்று நகர மேம்பாட்டுத் திட்டங்கள் தொடங்கப்பட்டதன் ஆறாம் ஆண்டு நிறைவினைக் குறிக்கும் வகையில் அறிவிக்கப்பட்டுள்ளன.
- அவை,
    - பொலிவுறு நகரங்கள் திட்டம்,
    - நகர்ப்புற புத்துயிர்ப்பு மற்றும் மாற்றத்திற்கான அடல் திட்டம் (அம்ருத்) மற்றும்
    - பிரதான் மந்திரி ஆவாஸ் யோஜனா – நகர்ப்புறத் திட்டம் ஆகியவையாகும்




## பினாகா ஏவுகணை – மேம்படுத்தப்பட்ட வடிவம்

- பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பானது வரம்பு அளவு மேம்படுத்தப் பட்ட பினாகா ஏவுகணையினை வெற்றிகரமாக சோதனை செய்து உள்ளது.
- இந்தச் சோதனையானது ஒடிசாவின் சந்திப்பூரிலுள்ள ஒருங்கிணைந்த சோதனைத் தளத்தில் மேற்கொள்ளப் பட்டது.
- 122 மி.மீ. உள்விட்டம் கொண்ட இந்த ஏவுகணைகளானது பல்குழாய் உள்ளக (மல்டிபேரல்) ஏவுகணை ஏவு வாகனத்தைப் பயன்படுத்தி ஏவப் படுகின்றன.
- இந்த மேம்படுத்தப்பட்ட வடிவமானது உயர் ஆற்றல் பொருட்கள் ஆராய்ச்சி ஆய்வகத்துடன் இணைந்து புனேவைச் சேர்ந்த போர்த் தளவாடங்கள் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிறுவனத்தினால் தயாரிக்கப் பட்டது.
- இவை நாக்பூரிலுள்ள எக்னாமிக் எக்ஸ்ப்ளோசிவ்ஸ் என்ற நிறுவனத்தின் உற்பத்தி ஆதரவினைப் பெற்றுள்ளன.
- இந்த மேம்படுத்தப்பட்ட ஏவுகணை அமைப்பானது 45 கி.மீ. தொலைவு வரையில் வைக்கப் பட்டுள்ள இலக்குகளைத் தாக்கி அழிக்கக் கூடும்.

## இந்தியாவின் முதலாவது உள்நாட்டு விமானந் தாங்கிக் கப்பல்

- உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட இந்தியாவின் முதலாவது விமானந் தாங்கிக் கப்பலானது 2020 ஆம் ஆண்டில் படையில் சேர்க்கத் திட்டமிடப்பட்டுள்ளது.
- படையில் இணைக்கப் பட்ட பிறகு இந்தியாவின் முதல் விமானந் தாங்கிக் கப்பலின்

நினைவாக அதற்கு ஐ.என்.எஸ். விக்ராந்த் எனப் பெயரிடப் படும்.

- இந்த உள்நாட்டு விமானந் தாங்கிக் கப்பலானது ஒரு பொது தனியார் கூட்டிணைவின் கீழ் கேரளாவின் கொச்சியில் அமைந்துள்ள கொச்சின் கப்பல்கட்டும் தளத்தில் கட்டமைக்கப் பட்டு வருகிறது.

## டிஜிட்டல் திறன் வாகையர் (சாம்பியன்ஸ்) திட்டம்

- தேசிய திறன் மேம்பாட்டுக் கழகம் மற்றும் வாட்ஸ் அப் ஆகியவை இணைந்து டிஜிட்டல் திறன் வாகையர் திட்டத்தினைத் தொடங்குவதற்கான தனது கூட்டணியைப் பற்றி அறிவித்துள்ளன.
- இது இந்திய இளைஞர்களை வேலைவாய்ப்பிற்கு ஏற்றவர்களாக மாற்றுவதற்காக அவர்களுக்கு டிஜிட்டல் திறன்களைப் பயிற்றுவிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்தக் கூட்டிணைவானது வாட்ஸ்அப் டிஜிட்டல் திறன் அகாடமி, பிரதான் மந்திரி கௌசல் கேந்த்ரா மற்றும் வாட்ஸ்அப் வர்த்தக செயலிப் பயிற்சி வகுப்புகள் என்ற வகையில் ஒத்துழைப்பிற்கான இரு பரவலான பிரிவுகளை அடையாளம் காண்கிறது.




## பரிவர்த்தன் தேர்தல் அறக்கட்டளை

- பரிவர்த்தன் தேர்தல் அறக்கட்டளையானது 2019-20 ஆம் ஆண்டில் தேர்தல் பத்திரங்கள் மூலம் பிர்லா எனும் குழுமத்திடமிருந்து பெற்ற 3 கோடி ரூபாயை அநாமதேயமாக தெரிவித்துள்ளது.
- ஒரு தேர்தல் அறக்கட்டளையானது பெயர் தெரிவிக்கப்படாத அரசியல் கட்சிகளுக்குப் பெருநிறுவன நன்கொடைகளை வழங்குவதற்காக வேண்டி தேர்தல் பத்திரங்களை பயன்படுத்துவது இதுவே முதன்முறையாகும்.
- மக்களாட்சி சீர்திருத்தங்களுக்கான சங்கமானது (Association for Democratic Reforms) தேர்தல் பத்திரங்களை இதற்காகப் பயன்படுத்துவது 2013 ஆம் ஆண்டு தேர்தல் அறக்கட்டளைத் திட்டம் மற்றும் 1962 ஆம் ஆண்டு வருமான வரி விதிகள்

ஆகியவற்றின் கீழ் நீதித் தன்மைக்குப் புறம்பானது எனக் குற்றம் சாட்டி உள்ளது.

***தேர்தல் அறக்கட்டளைத் திட்டம், 2013***

- தேர்தல் அறக்கட்டளை என்பது எந்தவொரு நபரிடமிருந்தும் பெறப்படும் நன்கொடைகளைப் பெற்று ஒழுங்கான முறையில் கையாளுவதற்காக இந்தியாவில் உருவாக்கப்பட்ட ஒரு இலாப நோக்கமற்ற அமைப்பாகும்.
- இந்தத் திட்டமானது மத்திய நேரடி வரிகள் வாரியத்தினால் அறிவிக்கப்பட்டதாகும்.
- தேர்தல் அறக்கட்டளைகள் பெறும் பங்களிப்புகளை அரசியல் கட்சிகளுக்கு வழங்குவதே அதனுடைய முதன்மை நோக்கமாகும்.
- வெளிநாட்டுக் குடிமகன்கள் (அ) நிறுவனங்களிடமிருந்து நன்கொடையினைப் பெறுவதற்கு இவற்றிற்கு அனுமதி கிடையாது.
- தேர்தல் அறக்கட்டளையானது பின்வருவனவற்றின் மூலம் தன்னார்வப் பங்களிப்புகளைப் பெறலாம்.
  - இந்தியக் குடிமகன்,
  - இந்தியாவில் பதிவு செய்யப்பட்ட நிறுவனம் மற்றும்
  - இந்தியாவிலுள்ள ஒரு நிறுவனம் (அ) இந்துக் குடும்பம் (அ) தனிநபர் சங்கம் (அ) தனிநபர் அமைப்பு

## கோவோவாக்ஸ்


- சீரம் இந்திய நிறுவனமானது கோவோவாக்ஸ் தடுப்பு மருந்தின் முதல் தொகுதியின் உற்பத்தியைத் தொடங்கி உள்ளது.
- இது நோவாவாக்ஸ் நிறுவனத்தினால் உருவாக்கப்பட்ட கோவிட்-19 தடுப்பு மருந்து ஆகும்.
- நோவாவாக்ஸ் என்பது ஓர் அமெரிக்க உயிரித் தொழில்நுட்ப நிறுவனமாகும்.



# சர்வதேசச் செய்திகள்

## உலக போதைப் பொருள் அறிக்கை 2021

- 2021 ஆம் ஆண்டு உலக போதைப் பொருள் அறிக்கையானது ஐக்கிய நாடுகளின் போதைப் பொருள் மற்றும் குற்றவியல் அலுவலகத்தினால் வெளியிடப்பட்டுள்ளது.
- 2020 ஆம் ஆண்டில் உலகம் முழுவதும் 275 மில்லியன் எண்ணிக்கையிலான மக்கள் போதைப் பொருளை உபயோகித்துள்ளனர் என இந்த அறிக்கையில் கூறப்பட்டு உள்ளது.
- 36 மில்லியன் மக்கள் போதைப் பொருள் பயன்பாட்டினால் ஏற்படும் கோளாறுகளால் பாதிக்கப் பட்டுள்ளனர்.
- போதைப் பொருளானது தீங்கு எனக் கருதி வந்த இளைஞர்களின் சதவீதமானது 40 சதவீதமாக குறைந்துள்ளது.




## விண்டோஸ் 11




- மைக்ரோசாஃப்ட் நிறுவனமானது ‘விண்டோஸ் 11’ எனப்படும் தனது புதிய விண்டோஸ் இயங்குதள அமைப்பினை வெளியிட்டுள்ளது.

- இது வின்டொஸ் மென்பொருளின் "அடுத்த தலைமுறை" என அழைக்கப்படுகிறது.
- இதற்கு முந்தைய வின்டோஸ் இயங்குதள அமைப்பான வின்டோஸ் 10 ஆனது 2015 ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில் வெளியிடப்பட்டது.
- எனினும் இன்டெல்லினுடைய 6வது மற்றும் 7வது தலைமுறைச் செயலகங்களைக் கொண்டுள்ள கணிப்பொறிகளில் வின்டோஸ் 11 மென்பொருள் அமைப்பைப் பயன்படுத்த இயலாது.

# பொருளாதாரச் செய்திகள்

## மொத்த உள்நாட்டு உற்பத்தியில் இந்திய வங்கிகளின் கடன் விகிதம்

- 2020 ஆம் ஆண்டில் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் வங்கிகளின் கடன் விகிதமானது ஐந்தாண்டில் இல்லாத அளவிற்கு 56% ஆக உயர்ந்துள்ளது.
- இது சர்வதேச நிதித் தீர்வு வங்கியின் சமீபத்தியத் தரவுகளின் படி கூறப் பட்டுள்ளது.
- 2020 ஆம் ஆண்டில் 56.075% கடன் விகிதத்துடன் மொத்த நிலுவைக் கடன் ஆனது 1.52 டிரில்லியன் டாலராக உள்ளது.

# சுற்றுச்சூழல் செய்திகள்

## ராம்கர் விஸ்தாரி வனவிலங்குச் சரணாலயம்

- ராம்கர் விஸ்தாரி வனவிலங்குச் சரணாலயமானது இராஜஸ்தானின் 4வது புலிகள் காப்பகமாக உருவெடுத்துள்ளது.
- இது இந்தியாவின் 52வது புலிகள் காப்பகமாகும்.
- இராஜஸ்தானிலுள்ள மற்ற 3 புலிகள் காப்பகங்கள் பின்வருமாறு
  - ரந்தம்போர் புலிகள் காப்பகம் – சவாய் மதோப்பூர்,
  - சரிஸ்கா புலிகள் காப்பகம் – அல்வார் மற்றும்
  - முகுந்த்ரா மலை புலிகள் காப்பகம் – கோட்டா

*குறிப்பு*

- புலிகள் திட்டமானது 1973 ஆம் ஆண்டில் 9 புலிகள் காப்பகத்துடன் தொடங்கப்பட்டது.
- இது மத்திய அரசின் நிதியுதவியினைப் பெறுகின்ற மத்திய சுற்றுச்சூழல், வனம் மற்றும் பருவநிலை மாற்ற அமைச்சகத்தின் ஒரு நடப்புத் திட்டமாகும்.

# முக்கிய தினங்கள்

## போதைப் பொருள் பயன்பாடு மற்றும் சட்டவிரோத போதைப் பொருள் கடத்தலுக்கு எதிரான சர்வதேச தினம் – ஜுன் 26

- இது போதைப் பொருள் பயன்பாடற்ற சர்வதேசச் சமுதாயத்தை உருவாக்குதல் எனும் இலக்கை அடைவதற்கான நடவடிக்கை மற்றும் ஒத்துழைப்பினை வலுப்படுத்துவதில் தனது உறுதிப்பாட்டினை வெளிப்படுத்துவதற்காக வேண்டி ஐக்கிய நாடுகள் அவையினால் கடைபிடிக்கப்படும் ஒரு தினமாகும்.
- இந்த ஆண்டின் இத்தினத்திற்கான கருத்துரு, "Share Facts on Drugs, Save Lives"

என்பதாகும்.

- ஐக்கிய நாடுகளின் போதைப் பொருள் மற்றும் குற்றவியல் அலுவலகத்தின் தலைமையகமானது ஆஸ்திரியாவிலுள்ள வியன்னாவில் அமைந்துள்ளது.




# இதரச் செய்திகள்

## QS EMBA தரவரிசை 2021




- பெங்களூருவின் இந்திய மேலாண்மைக் கல்வி நிறுவனத்தின் நிறுவன மேலாண்மைக்கான முதுகலைப் பட்டப்படிப்பானது சமீபத்திய QS நிர்வாக முதுகலை வணிக மேலாண்மைத் தரவரிசையில் இந்தியாவின் சிறந்த படிப்பாக இடம் பெற்று உள்ளது.
- பெங்களூருவின் இந்திய மேலாண்மைக் கல்வி நிறுவனமானது உலகளவில் 39வது இடத்தில் உள்ளது.
- இந்தத் தரவரிசையின் முதல் 100 இடங்களில் இடம் பெற்ற ஒரே இந்திய நிறுவனம் இதுவேயாகும்.
- ஆசிய – பசிபிக் பிரிவில் இந்தக் கல்வி நிறுவனம் 10வது இடத்தைப் பெற்றுள்ளது.

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★